https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

27TH OCTOBER 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 103



## எல்பிட்டியவைக் கைப்பற்றிய திசைகாட்டி:

# நாடாளுமன்றைக் கைப்பற்றும் என்பதற்கான அறிகுறி

நேற்று இடம்பெற்ற காலி எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றுள்ளது. அந்தத் தேர்தலில் 30 ஆசனங்களில் 15 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

இதன்மூலம் நாடாளுமன்றத்தை தேசிய மக்கள் சக்தி மிகஇலகுவாகக் கைப்பற்றும் என்ற சமிக்சை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை உள்ள கருத்துக்கணிப்புகளின்படி,தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றில் 120 ஆசனங்களை கைப்பற்றும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், முன்னெடுக்கப்பட்டு வரும் பிரசார பணிகள் இந்த எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கோடு தேசிய மக்கள் சக்தி செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர் தாக்குதல்: இமாம் அறிக்கை நாளை

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான மற்றுமொரு விசாரணை அறிக்கையான முன்னாள் நீதிபதி எஸ்.ஐ. இமாமின் அறிக்கையை நாளை வெளியிடவுள்ளதாக உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் ஏற்கனவே இது தொடர்பான அல்விஸ் அறிக்கையை வெளியிட்டி ருந்தமையும் அதை அரசு ஏற்கமறுத்தமையும் குறிப்பிடத்தக்கது.



# அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யுங்கள்

## வேட்பாளர்களை உசுப்பேற்றும் ரணில்

கடந்த ஜனாதிபதி தேர்தலில் அனுரகுமார திஸாநாயக்க வழங்கிய வாக்குறுதிகளை உடன் நிறைவேற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு ரணில் விக்ரமசிங்க அவரது வேட்பாளர்களுக்கு கூறியுள்ளார்.

இந்த வாக்குறுதிகள் தொடர்பில் கேள்விகளை எழுப்புவதற்காக தான் தேர்தல் மேடைகளில் ஏறப்போவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# அடுத்த தேர்தல் ஜனவரியில்

ஒத்திப்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு வட்டாரம் தெரிவிக்கிறது.

இந்தத் தேர்தல் 2023 மார்ச் 9ஆம் திகதி இடம்பெறவிருந்தது.

அரசு அதற்கு நிதி ஒதுக்காததால் தேர்தல் ஒத்திப்போடப்பட்டது.

இந்த உள்ளூராட்சி சபைகள் அனைத்தும் இப்போது விசேட ஆணையாளர்களின் கீழ் இயங்குகின்றன.



புதுசுடர்
www.puthusudar.lk
2024 OCTOBER 27 - SUNDAY

# அவசரம் வேண்டாம்

ஜனாதிபதி தேர்தல் முடிந்து அனுரகுமார திஸ ாநாயக்க ஜனாதிபதியாகப் பதிவியேற்றதன் பின்னர் நாடு வித்தியாசமான முறையில் பயணித்துக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

அரசுக்குள் ஆடம்பரங்கள் இல்லை  வீண் செலவு இல்லைஅமைச்சர்களுக்கு அதிக வாகனங்கள் இல்லை அதிக பாதுகாப்பு இல்லை .

ஜனாதிபதிகூட ஒரேயொரு வாகனத்தில்தான் பயணிக்கிறார்.அதிக பாதுகாப்பும் இல்லை. பந்தாவும் இல்லை.மக்களோடு மக்களாக திரிகிறார்.

கடந்த ஆட்சியில் ஜனாதிபதிகள் எப்படி சென்றார்கள் என்று தெரியும்தானே.பல வாகனங்கள். கணக்கே இல்லாத பாதுகாப்பு ஊழியர்கள்.

வீதிகள் மூடப்படும்  மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தப்படும்.மக்களுக்கும் அவர்களுக்கும் இடையில் இடைவெளி இருக்கும்.

இவை எதுவும் இப்போதைய ஜனாதிபதிக்கு இல்லை.

எல்லாமே இதுவரை இடம்பெற்ற ஆடம்பர –ஊழல் அரசுகளின் செயற்பாடுகளுக்கு எதிராகவே உள்ளன.

வந்த வரத்தில் கடந்த ஆட்சியில் நாசமாக்கப்பட்ட  800இற்கு மேற்பட்ட வாகனங்களை அரசு கைப்பற்றியது.

ஐந்து வருடங்களுக்கும் மேலாக வரி காட்டாமல் டிமிக்கி விட்டுக்கொண்டு திரிந்த மெண்டிஸ் சாராய நிறுவனத்தின் தலைவர் ஆலோசியஸ் சிறையில் அடைக்கப்பட்டார் .

அதனூடாக வரி காட்டாமல் டிமிக்கி விட்டுக்கொண்டு திரிந்த ஏனைய நிறுவனங்களும் விரைவாக வரியைக் கட்டுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஈஸ்டர்  தாக்குதல் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்டுவாப்பிட்டி தேவாலயத்துக்குச் சென்று கிறிஸ்தவ மக்களை சந்தித்து அந்த மக்களுக்கு வாக்குறுதியும் வழங்கினார் ஜனாதிபதி.

பிழையான முறையில் ஈட்டப்பட்ட சொத்துக்களை அரசுடமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசியலைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார் ஜனாதிபதி.

ஆனால், எதிர்கட்சிகளோ இந்த நல்ல செயற்பாடுகளைக் கணக்கில் எடுக்காது அரசில் எதையாவது குறைகளைக் கண்டுபிடித்து அரசைத் தாக்குவதற்கே முயற்சி செய்கின்றன.

சில நாட்களுக்கு முன் தனது வேட்பாளர்களை சந்தித்துப் பேசிய ரணில் விக்ரமசிங்க  அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யுமாறு அவர்களைத் தூண்டியுள்ளார்.

அனுர தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதியை இன்னும் நிறைவேற்றவில்லையாம். அதற்காக ஆர்ப்பாட்டம் செய்யட்டுமாம்.

ஜனாதிபதி அவசரப்படாமல் ஒவ்வொன்றாகச் செய்துகொண்டு வருகிறார். அவர் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாவற்றையும் ஒரே நாளில் நிறைவேற்ற முடியாது.

இந்த உண்மை தெரிந்திருந்தும், மக்களை குழப்புவதற்காக திட்டமிடுகிறார் ரணில்.

எல்லா வாக்குறுதிகளும் கட்டம் கட்டமாக நிறைவேற்றப்படும். மக்கள் அவசரப்பட வேண்டாம்.

2024 பாராளுமன்ற பொதுத் தேர்தலில் அதிக விருப்பு வாக்குகளைப் பெறுவதற்கு “புதுச் சுடர்” இல் விளம்பரம் செய்யுங்கள்!
+94 77 788 4883








# எந்த விதத்தில் நியாயம்?

எமது நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் இந்த நாட்டுக்குச் செய்த சேவையை விட அவர்களுக்கே செய்துகொண்ட சேவைகள்தான் அதிகம்.

சொத்து குவிப்பு,சுகபோக வாழ்க்கை என வாழ்க்கையைக் கழித்ததைத் வேறு எதையும் அவர்கள் இந்த நாட்டுக்குச் செய்ததில்லை.

மஹிந்த ராஜபக்ச, ரணில் போன்றவர்களும் இதற்கு விதிக்கல்ல.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் 16 அரச வாகனங்கள்.ரணில் விக்ரமசிங்கவிடம் 11 வாகனங்கள்.

ஒரு நாட்டின் தலைவருக்கு இத்தனை வாகனங்கள் எதற்கு ? தான் பயணிப்பதற்கு ஒரு வாகனமும் பாதுகாப்பு படையினர் உடன் வருவதற்கு ஒரு வாகனமும் இருந்தால் போதும்தானே.

ஆனால், 16 வாகனங்கள் என்றும் 11 வாகனங்கள் என்றும் வைத்திருப்பது -அவற்றைப் பாவிப்பது எந்த விதத்தில் நியாயம்.

தெரிந்துகொண்டே இப்படி மக்களின் சொத்துக்களை வீண் விரயம் செய்திருக்கிறார்கள் இந்தத் தலைவர்கள்.

இப்படி தேவைக்கு அதிகமாக பாவிக்கிறோமே என்று கொஞ்சமேனும் இவர்களுக்கு மன உறுத்தல் வருவதில்லையா?

எப்படி வரும்.மக்களுக்கு சேவை செய்வதற்காக பதவியேற்றிருந்தால்தானே வரும்.இவர்கள் எல்லோரும் சுகபோகத்தில் வாழ்வதற்காக அந்தப் பதவியைப் பயன்படுத்தியவர்கள்.

பதவியில் இருக்கும்போதுதான் அப்படி என்றால் பதவி இழந்த நிலையிலும் அப்படித்தான்.அரசிடம் வாகனங்களை ஒப்படைப்பதற்கு விருப்பமில்லை.

தான் அந்த வாகனங்கள் அனைத்தையும் பாவிப்பதை நியாயப்படுத்துகிறார் மஹிந்த. போரை முடித்து வைத்த தனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகவும் அதற்காகவே அத்தனை வாகனங்களையும் பாவிப்பதாகவும் கூறுகிறார்.

இது எந்த வகையில் நியாயம். பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்தால் பாதுகாப்பைத்தானே பலப்படுத்த வேண்டும் வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் எப்படி பாதுகாப்பு பலப்படும்.

இதெல்லாம் தாம் சுகபோகமாக வாழ்வதற்கு சொல்லுகின்ற காரணங்கள் தமது சுகபோக வாழ்க்கையை நியாயப்படுத்துகின்ற காரணங்கள்.

இதை ஏற்க முடியாது.மக்களும் ஏற்கமாட்டார்கள்.வெளிநாடுகளில் இவர்களைவிடவும் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள தலைவர்கள் ஒரு வாகனத்தில்தான் பயணிக்கிறார்கள். துவிச்சக்கர வண்டிகளில் பயணிக்கிறார்கள்.

எமது தலைவர்கள் சுகபோகத்தோடும் பெருமையோடும் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள்.

மக்களிடம் செல்லும்போது பல வாகனக்களுடன் செல்ல வேண்டும். அப்படி சென்றால்தான் தன்னை ஒரு பெரிய தலைவனாக மதிப்பார்கள் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

ஆனால், மக்களின் பணத்தை இவ்வாறு வீண் விரயம் செய்கிறோமே என்று அவர்கள் ஒருபோதும் எண்ணியதில்லை.

இவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகத்தான் நாடு பொருளாதார வீழ்ச்சியை சந்தித்தது. மக்களின் வறுமை அதிகரித்தது வேலையின்மை அதிகரித்தது ஊழல்,மோசடிகள் அதிகரித்தன.

இவ்வாறான ஊழல்மிக்க ஆட்சி- ஊழல்மிக்க தலைவர்கள் இனியும் வேண்டாம் என்றுதான் நட்டு மக்கள் முடிவெடுத்து ஆட்சியைக் கவிழ்த்து புதியவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்துள்ளனர்.

இந்த புதியவர்கள் ஊழலை ஒழிப்பதற்காக -ஊழல் புரிந்தவர்களை தண்டிப்பதற்காக -கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை -சொத்துக்களை மீள கைப்பற்றுவதற்காக - வரி நிலுவையைத் திரட்டுவதற்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பிரமாதம்.

இந்த செயற்பாடுகளை தொய்யவிடாது முன்கொண்டு செல்வதற்காக மக்கள் அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்.




# GSCS இன்டர்நேஷனல் மற்றும் JAAF இணைவு

GSCS International Ltd, உலகெங்கிலும் உள்ள 35 க்கும் மேற்பட்ட நாடுகளில் சான்றிதழ், மதிப்பீடு, தணிக்கை, சரிபார்ப்பு, ஆய்வு ஆகியவற்றிற்கான திறனை உருவாக்குகிறது.

அந்த நாடுகளுக்கு நடைமுறையான, நிலையான மற்றும் நீண்டகால தாக்கத்தை மேம்படுத்துவதற்காக செயல்படுகிறது.

SustainSphere 2.0 நிகழ்ச்சியானது GSCS International – Sri Lanka ஆல் இலங்கையில் ஆடைத் தொழிலை புதுமைப்படுத்தும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆடைத் தொழில்துறையின் நிலையான வளர்ச்சியின் எதிர்காலம் குறித்து கலந்துரையாடப்பட்ட இந்நிகழ்வில், கல்வி நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், வர்த்தக சங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பல்வேறு வாடிக்கையாளர் அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆர்வமுள்ள பல்வேறு துறைகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முதலாவது சிறப்புரையை மொரட்டுவ பல்கலைக்கழக வசதிகள் முகாமைத்துவப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஹர்ஷினி மல்லவராச்சி நிகழ்த்தினார். நிகர பூஜ்ஜிய ஆடைகளை உற்பத்தி செய்வதற்கான ஒரு வழியாக மறைமுக பொருளாதாரம் பற்றிய கருத்துக்களை அவர் அங்கு சேர்த்தார்.

# Leasing in Three Letters ஊக்குவிப்பு நிகழ்வு

இலங்கையில் வங்கி அல்லாத முன்னணி நிதி நிறுவனமாகத் திகழ்ந்து வருகின்ற பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி நிறுவனம், "Leasing in Three Letters" என்ற ஊக்குவிப்பு பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளது.

அனைத்து செலவுகளும் உள்ளடங்கிய ஹெலிகொப்டர் சவாரிகள், ஒரு நாள் சுற்றுலாக்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாக்கள் உள்ளிட்ட வியப்பூட்டும் பரிசுகளை வெல்லும் வாய்ப்பினை புதிய மற்றும் தற்போதைய வாடிக்கையாளர் களாக உள்ளவர்களுக்கு இப்பிரச்சாரம் வழங்குகின்றது.

பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி வழங்கும் பல்வேறுபட்ட குத்தகைத் தீர்வுகள், சந்தையில் ஒப்பீட்டளவில் சிறந்த வட்டி வீதங்களை வழங்குகின்றன என பெயர்பெற்றுள்ளதுடன், அனைத்து தேவைகளையும் ஒரே இடத்திலேயே பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வழங்கும் சேவை மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட குத்தகை திட்டங்கள் அதற்கு மேலும் வலுச் சேர்க்கின்றன. தற்போது இப்புதிய பரிசுகள் வழங்கப்படும் நிலையில், நிறுவனத்தின் தீர்வுகள் உண்மையில் தவிர்க்க முடியாதவையாக மாறியுள்ளன. அந்த வகையில், 03 அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர் ஒருவரும் அடுத்து வரும்




மூன்று மாதங்களுக்கு மாதாந்தம் தெரிவு செய்யப்பட்டு, பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி பிரத்தியேகமாக வழங்குகின்ற ஒப்பற்ற பரிசான, அனைத்து செலவுகளும் அடங்கிய ஹெலிகொப்டர் சுற்றுலாவை வெல்வர். இந்த ஊக்குவிப்பு பிரச்சாரத்தின் 3வது மாதத்தின் முடிவில் 100 அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் மற்றும் அவர்களுடன் 3 குடும்ப அங்கத்தவர்களும் (மொத்தமாக 400 பேர்), பிரபலமான பேர்ள் பே (Pearl Bay) நீர்ப்பூங்காவுக்கு ஒரு நாள் சுற்றுலா செல்வதற்கான இலவச ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்வர். இறுதியாக, 12 அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்வர்.

# அமானா வங்கிக்கு தங்க விருது



அமானா வங்கி, அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலங்கை இஸ்லாமிய வங்கியியல் மற்றும் நிதியியல் தொழிற்துறை விருதுகள் (SLIBFI) 2024 நிகழ்வில், ஆண்டின் சிறந்த நிறுவனத்துக்கான தங்க விருதை சுவீகரித்திருந்தது.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு கொழும்பு ஷங்கிரி-லா ஹோட்டலில் நடைபெற்றதுடன், இதன் நடுவர்களாக KPMG செயலாற்றியதுடன், UTO EduConsult ஏற்பாடு செய்திருந்தது.

விருதுகள் வழங்கும் நிகழ்வின் பிரதான விருதை சுவீகரித்திருந்தமைக்கு மேலாக, ஆண்டின் சிறந்த டீலுக்கான தங்க மற்றும் வெள்ளி விருதுகளை சுவீகரித்தது.

விதுல்லங்காவின் நிலத்தில் பொருத்தப்பட்ட ஹொரண சூரிய வலு ஆலை மற்றும் பொலன்னறுவையிலுள்ள முன்னணி அரிசி ஆலைக்கு சூரிய வலு வசதியை ஏற்படுத்த நிதிவசதிகளை வழங்கியிருந்தமைக்காக இந்த கௌரவிப்புகள் வழங்கப்பட்டன.

ESG கொள்கைகளுக்கான தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில் இஸ்லாமிய நிதியியல் நிறுவனங்களுக்காக புதிதாக அறிமுகம் செய்யப்பட்டிருந்த ESG பிரிவில் தங்க விருதையும் அமானா வங்கி சுவீகரித்திருந்தது.

வட்டி-சாராத இஸ்லாமிய வங்கியியல் பிரிவில் அமானா வங்கியின் தொடர்ச்சியான முயற்சிகளை கௌரவிப்பதாக SLIBFI விருதுகள் அமைந்திருந்ததுடன், நிதிசார் உள்ளடக்கம் மற்றும் நிலை பேறாண்மை ஆகியவற்றுக்கான தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்தது.




# Browns E-Care பேட்டரி உத்தரவாதம் அறிமுகம்

இலங்கையில் வாகன பட்டரி தொழிற்துறையில் முதல் தடவையாக பிரவுன்ஸின் பேட்டரி மற்றும் டயர் மூலோபாய வணிகப் பிரிவானது (Browns' SBU) Browns E-Care பேட்டரி உத்தரவாதச் செயற்பாட்டுத் திட்டத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியது. இது இலங்கை பட்டரி துறையில் முதன் முதலாக காகிதமில்லா மின் உத்தரவாதத்தை நடைமுறைப்படுத்து வதில் ஒரு மைல் கல்லாகத் திகழ்கிறது.

இந்த புதிய கண்டுபிடிப்பு மூலம் வாடிக்கையாளர்கள் இப்போது காகிதமில்லா தீர்வைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பாரம்பரிய அச்சிடப்பட்ட உத்தரவாத அட்டைகளை புறக்கணிக்க முடியும். இந்த பட்டரி உத்தரவாதம் Browns E-Care App ஊடாக Exide முகவர்கள் மூலம் செயற்படுத்தப்படும். இது, பிரவுன்ஸின் டிஜிட்டல் மயமாக்கல் தீர்வுகள் (Digital Transformation Solutions -DTS) மூலம் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மற்றும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட ஒரு இடைமுகம் (Interface) ஆகும்.

இந்த புதிய இயங்குதளத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் பதிவு செய்யப்பட்ட முகவர்கள், வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்த பட்டரிகளுக்கு எக்ஸைட் ஈ - உத்தரவாதத்தை (Exide – E- Warranty) மொபைல், இணையம் மற்றும் S.M.S மூலம் சிரமமின்றி செயல்படுத்த முடியும்.

# தனித்துவமான அனுபவத்தை வழங்கும் Samsung




2024 Crystal 4K Dynamic தொலைக்காட்சியுடன் மீண்டும் ஒருமுறை இந்நாட்டு வாடிக்கையாளரின் பொழுது போக்கை அர்த்தமுள்ளதாக்க Samsung முயற்சித்துள்ளது.

புதுமையான தொழில்நுட்பத்தின் சிறப்பை முன்னிலைப்படுத்தி. 4K தொழில்நுட்பம், AirSlim வடிவமைப்பு, சிறப்பு Crystal நிறங்கள் மற்றும் Knox பாதுகாப்பு போன்ற அம்சங்களைக் கொண்ட இப் புதிய Crystal 4K Dynamic தொலைக்காட்சி தொடர், கவர்ச்சிகரமான நிற அமைப்புகள், மேம்படுத்தப்பட்ட ஒலி தொழில்நுட்பம் மற்றும் உயர் பாதுகாப்புடன் வாடிக்கையாளருக்கு புதிய அனுபவத்தை வழங்கும். மிகத் தெளிவான படக்காட்சிகளை பார்வையாளர்களுக்கு வழங்குவதோடு மட்டுமல்லாமல், நவீன தொழில்நுட்பத்தின் கலவையாக வாடிக்கையாளருக்கு தனித்துவமான அனுபவத்தை வழங்கும் இந்த புதிய தொலைக்காட்சி தொடர், எந்த சூழலுக்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது சிறப்பம்சமாகும்.

# OrphanCare உடன் கைகோர்க்கும் Emerald




இலங்கையின் முன்னணி ஆடவர் ஆடை வர்த்தக நாமமான Emerald International, ஆதரவற்ற குழந்தைகளை இளைஞர்களாக மாறும் வரை அவர்களை வளர்ப்பதற்கு ஆதரவளிக்கும் ஒரு சுயாதீன அறக்கட்டளையான OrphanCare உடன் இணைந்து செயற்படுவது தொடர்பான தனது கூட்டாண்மையை பெருமையுடன் அறிவித்துள்ளது.

இந்த ஒத்துழைப்பின் மூலம் அதன் Casual ஆடை வகைகளான 'Emerald Active' மற்றும் 'Emerald Fashion' ஆகியவற்றின் கீழ் விற்கப்படும் ஒவ்வொரு ஆடைக்கும் ரூ. 100 இனை Emerald நிறுவனம் அன்பளிப்பாக ஒதுக்கவுள்ளது. சமூகப் பொறுப்புணர்வு மற்றும் பின்தங்கிய சமூகங்களை மேம்படுத்துவதில் Emerald நிறுவனம் கொண்டுள்ள ஆழமான அர்ப்பணிப்பை இந்த முயற்சி சுட்டிக் காட்டுகிறது.

Emerald International முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எஃப்.எம். இக்ராம் இது குறித்து தெரிவிக்கையில், "தொண்டு நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு சிறந்த பாரம்பரியத்தை Emerald கொண்டுள்ளது.

OrphanCare உடனான எமது கூட்டு முயற்சியானது இந்த பாரம்பரியத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்கிறது. அத்துடன் எமது பங்களிப்பானது, பல தகுதியான சிறுவர்களின் வாழ்க்கையில் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதோடு, அவர்களின் வாழ்க்கையில் இரண்டாவது முறை கைவிடப்படுவதைத் தவிர்க்கும் என நாம் நம்புகிறோம்." என்றார்.

# பண்டிகைக் கொண்டாட்டத்தை ஆரம்பித்த Pegasus Reef



Pegasus Reef ஹோட்டலில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துள்ளது.

ஹோட்டலின் வருடாந்த கேக் கலவையிடும் விழாவின் மூலம் அவர்களது பண்டிகைக் கொண்டாட்ட நிகழ்வுகள் வேடிக்கை மற்றும் குதூகலத்துடன் ஆரம்பித்துள்ளது.

இந்த நிகழ்வானது, பண்டிகை விடுமுறையின் ஆரம்பத்தைக் குறிப்பதோடு, ஹோட்டலின் அழகான கடற்கரையோரத்தில் இதனைக் கொண்டாட பல்வேறு இடங்களிலிருந்தும் விருந்தினர்கள் வந்திருந்தனர்.

சமையல்கலை நிபுணர்கள் கேக் கலவைக்கான பொருட்களைக் கொண்டு வந்தபோது, பாரம்பரிய ட்ரம் ஒலி எழுப்பப்பட்டது.

அது காற்றில் பரவி அங்கு பண்டிகைக்கான மனநிலையை உருவாக்கியது. வாசனைப் பொருட்கள், பழங்கள், நட்ஸ்கள் ஆகியவற்றைக் கலப்பதில் விருந்தினர்களும் இதன்போது கலந்து கொண்டனர்.

இது அதிர்ஷ்டத்தையும் விடுமுறையின் மகிழ்ச்சியையும் தரும் என நம்பப்படுகிறது. அத்தோடு, காற்றலை முழுவதும் மகிழ்ச்சியான உரையாடல்களால் நிரம்பியிருந்ததோடு, அனைவரும் சுவையான சிற்றுண்டி வகைகளை உண்டு மகிழ்ந்தனர். குடும்பங்கள் மற்றும் நண்பர்களுடன் இணைந்து விடுமுறைக் காலத்தை ஆரம்பிக்க இது சிறந்த வழிமுறையாகும்.

# ஹேமாஸ் மருத்துவமனையின் 'BreastOber 2024'




இந்த ஒக்டோபரில் மீண்டும் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் அனுட்டிக்கப்படுகின்ற நிலையில், ஹேமாஸ் மருத்துவமனை, 'BreastOber 2024' இனை ஆரம்பித்து தனது அர்ப்பணிப்பைக் காண்பிக்க முன்வந்துள்ளது.

ஆரம்பத்திலேயே கண்டறிந்து கொள்வதன் முக்கியத்துவம் குறித்து பெண்களுக்கு அறிவூட்டி, உயிர் காக்கும் சிகிச்சை வழிமுறைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதே இந்த வருடாந்த முயற்சியின் நோக்கம்.

சர்வதேசரீதியில் பெண்கள் மத்தியில் மிகவும் பொதுவான ஒன்றாக மார்பக புற்றுநோய் காணப்படுகின்ற நிலையில், இது குறித்த விழிப்புணர்வு மற்றும் உரிய நடவடிக்கை முன்னரை விடவும் மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது.

சர்வதேசரீதியில் பெண்கள் மத்தியில் மிகவும் பொதுவான ஒன்றாக மார்பக புற்றுநோய் காணப்படுகின்ற நிலையில், இதனால் பாதிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை அச்சமூட்டும் வகையில் காணப்படுகின்றது.

சர்வதேச அளவில் சுமார் 2.3 மில்லியன் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் உள்ளதாக புதிதாக கண்டறியப்பட்டுள்ளதுடன், இவ்வியாதி சுமார் 670,000 உயிர்களைக் காவுகொண்டுள்ளது.

# நவலோக மருத்துவமனை குழுமம் வளர்ச்சியில்...

தெற்காசியாவில் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான சுகாதாரப் பாதுகாப்பில் முன்னோடியான நவலோக்க மருத்துவமனைக் குழுமம், மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த நிதியாண்டில் சிறந்த நிதிச் செயல்திறனைப் பெற்றுள்ளது.

அதன்படி, கடந்த நிதியாண்டில் நவலோக்க மருத்துவமனை குழுமம் 10 பில்லியன் ரூபா வருமானத்தை பதிவு செய்ய முடிந்ததுடன். முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 11.54% ஆண்டு வளர்ச்சியாக அமைந்திருந்தது.

இந்த வளர்ச்சியின் மூலம், சவாலான பொருளாதாரச் சூழலில் தொடர்ந்து வளர்ச்சியடையும் அதே வேளையில், உயர்தர சுகாதார சேவைகளை வழங்குவதற்கான



அதன் உறுதியான நிலைப்பாட்டை நவலோக்க மருத்துவமனை குழுமம் வலியுறுத்தியுள்ளது. நவலோக்க மருத்துவமனை குழுமம் வரிக்கு முந்திய இலாபமாக 576.2 மில்லியன் ரூபாவைப் பதிவு செய்துள்ளது, இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 178.61% வலுவான வளர்ச்சியாகும்.

மேலும் 2023 ஆம் ஆண்டின் இறுதியில், குழுமத்தின் செயல்பாட்டு இலாபம் 73.4 மில்லியன் ரூபா இழப்பைக் காட்டியது. நவலோக்க மருத்துவமனை குழுமம் 2024 இல் 1.02 பில்லியன் ரூபா இலாபமாக வளர்ச்சியடைய முடிந்தது, இது மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கியதுடன் குழுமத்தின் செயல்பாட்டு இலாபம் 158.28% வளர்ச்சியுடன் 1.32 பில்லியன் ரூபாவாக அமைந்திருந்தது.

இது தவிர, நவலோக்க மருத்துவமனைனக் குழுமம் ஒரு பங்குக்கான வருவாய் (EPS) குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்ய முடிந்தது, இது எதிர்மறையாக 0.46 ஆக இருந்ததுடன் பங்குதாரர் மதிப்பை மேலும் வலுவடையச் செய்தது.

# செலான் வங்கியின் புதிய factoring நிதிச்சேவை மீள ஆரம்பம்

செலான் வங்கியானது Seylan Factoring மூலம் அதன் பரந்த நிதிச் சேவையை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கு நிலுவையில் உள்ள வர்த்தக வரவுகளை வர்த்தக பரிமாற்றம் செய்வதன் மூலம் நிதி திரட்டும் வழிமுறையாகும்.

பாரம்பரியக் கடன் வழங்கலைப் போலன்றி பரந்துபட்ட காரணிகள் மற்றும் திருப்பிச் செலுத்துவதற்கான ஆதாரங்களை கருத்திற் கொள்ளும் factoring முதன்மையாக பெறவேண்டியவைகளின் தரம் மற்றும் வசூலிப்பதற்கான வசதியை அமைப்பது ஆகியவற்றில் தங்கியுள்ளது.

Seylan Factoring மூலம் பணத்திற்கான விரைவான அணுகல், அதிகரித்த பணப்புழக்கம் மற்றும் விநியோகஸ்தர்கள் வழங்கும் ஆரம்ப கட்டண தள்ளுபடியை வாடிக்கையாளர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பையும் பெறுவர்.

இந்தச் சேவையானது ஒரு வணிகத்தின் கடன் விலைப்பட்டியல் மதிப்பின் 80மூ வரையான பெறுமதிக்கு சில மணிநேரங்களில் நிதியளிக்கிறது.

# சுதேசி Star Sales Awards




தனிநபர் பராமரிப்புத் துறையில் முன்னணியில் உள்ள மூலிகை சார்ந்த Swadeshi Industrial Works PLC ஆனது, அண்மையில் நீர்கொழும்பு ஜெட்விங் ப்ளூ ஹோட்டலில் 'சுதேசி Star Sales Awards 2023/24' விழாவை நடாத்தியிருந்தது.

விற்பனையில் சிறந்து விளங்குவோரை கௌரவிப்பதற்காகவும், பொது மற்றும் நவீன வர்த்தக பிரிவுகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு வெகுமதி அளிக்கவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் நிறுவனத்தின் வெற்றிக்கு பங்களித்த முக்கிய வர்த்தக பங்காளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நவீன புத்தாக்க கண்டுபிடிப்புகளுடன் இலங்கை பாரம்பரியத்தை இணைக்கும் சுதேசியின் முக்கியமான பண்பை பிரதிபலிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விழா பாரம்பரிய மேள தாளங்களுடன் ஆரம்பமானது. நிறுவனத்தின் முன்னோக்கிய பயணத்தை அடையாளப்படுத்தும் வகையில் பிரபல 'தன்னோ புன்துன்கே' எனும் மெல்லிசையுடன் ஆரம்பமாகி, நிறுவனத்தின் எதிர்கால பயணத்தை எடுத்துக்காட்டும் 'ரைஸ் அப்' எனும் எழுச்சியூட்டும் இசையாக மாறியது.

# சின்ன புன்னகையை பாதுகாப்போம்



உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடும் வகையில், முன்னணி வாய்ச் சுகாதார பராமரிப்பு வர்த்தக நாமமான க்லோகாட் (Clogard), பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பல் மருத்துவ பீடத்துடன் இணைந்து, முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பக் குழந்தைப் பருவ மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கான விசேட நிகழ்வொன்றை அண்மையில் முன்னெடுத்திருந்தது.

க்லோகாட் அனுசரணையில் 'Saving Little Smiles' (சின்ன புன்னகையை பாதுகாப்போம்) எனும் தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வானது, பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பக் குழந்தைப் பருவ மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் மத்தியில் குழந்தைகளின் பல் பராமரிப்பு தொடர்பான பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இந்த நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 300 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். சிறுவயதிலிருந்தே குழந்தைகளின் பல் ஆரோக்கியத்தை பராமரித்தல், மேம்படுத்துவதில் கல்வி அறிவை ஊட்டுபவர்களின் முக்கிய பங்கை இது வலியுறுத்தியது.

கல்வி அறிவை ஊட்டுபவர்களிடையே பகிர்ந்து கொள்ளப்படும் அறிவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் இது ஆரம்பக் குழந்தை பருவ வளர்ச்சியின் போதான பல் சிதைவு போன்ற பல் தொடர்பான பிரச்சினைகள் கண்டறிந்து தீர்க்கப்படுவதை உறுதிப்படுத்த உதவுகிறது.

# ஷங்கிரி-லாவுக்கு விருதுகள்



ஷங்கிரி-லா ஹம்பாந்தோட்டை 8வது South Asian Travel Awards (SATA) 2024 நிகழ்வில் இரு மதிப்புமிக்க விருது அங்கீகாரங்களைச் சம்பாதித்து வெற்றியை நிலைநாட்டியுள்ளது. 2024 செப்டெம்பர் 20 வெள்ளிக்கிழமையன்று Aloft Kathmandu Thamel இல் இடம்பெற்ற விமரிசையான நிகழ்வில் 200 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன், தெற்காசியாவின் பிரயாண மற்றும் விருந்தோம்பல் துறையில் மிகச் சிறந்தவற்றை வெளிக்காண்பித்தவாறு, பல்வகைப்பட்ட பிரிவுகளில் விருது அங்கீகாரங்களுக்கு பெயரிடப்பட்ட 400 க்கும் மேற்பட்டவர்களுக்கு இந்நிகழ்வில் கௌரவமளிக்கப்பட்டுள்ளது.

ஷங்கிரி-லா ஹம்பாந்தோட்டை, இலங்கையிலுள்ள முன்னணி குடும்ப உல்லாச விடுதி (Leading Family Resort in Sri Lanka) மற்றும் இலங்கையிலுள்ள முன்னணி திருமண நிகழ்வு உல்லாச விடுதி (Leading Wedding Resort in Sri Lanka) ஆகிய விருதுகளைத் தனதாக்கியுள்ளது.

# E.B. Creasy Solar வெல்லவாயவில்



இலங்கையின் முன்னணி சூரிய வலுத் தீர்வுகளை வழங்கும் E.B. Creasy Solar, தனது புதிய சூரிய வலு தீர்வுகள் நிலையத்தை செப்டெம்பர் 6ஆம் திகதி வெல்லவாயவில் திறந்துள்ளது.

இந்த நிலையத்தில் பரந்தளவு சூரிய வலுத் தீர்வுகள் கிடைப்பதுடன், இதில் நிலை 1 சூரிய படலகள் மற்றும் LONGI, AE Solar, Thornova, LORENTZ Solar Water Pumps மற்றும் உலகின் முதல் தர இன்வேர்டர் வர்த்தக நாமமான SUNGROW ஆகியவற்றின் தொழில்நுட்பம் ஆகியவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

E.B. Creasy Solar தயாரிப்புத் தெரிவுகள் உயர் வினைத்திறன் மற்றும் நீடித்த பாவனையை கொண்டதாக அமைந்துள்ளன. E.B. Creasy Solar இனால் புத்தாக்கமான சூரிய வலுத் தொழில்நுட்பங்கள் வழங்கப்படுவது மாத்திரமன்றி, நம்பிக்கை மற்றும் நீண்ட கால வாடிக்கையாளர் தன்னிறைவை உறுதி செய்யும் வகையில் பரிபூரண விற்பனைக்கு பிந்திய ஆதரவையும் வழங்குகின்றது.

# டிஜிட்டல் மோசடியில் சிக்கியுள்ளீர்களா? பாதுகாக்க ஏளைய வழங்கும் வழிகள்

ஷொப்பிங் செய்பவர்கள் அதிக டிஜிட்டல் முறையில் செலவுகளை மேற்கொள்ளும்போது மோசடி செய்பவர்கள் நிதியியல் மோசடிகளால் பாதிக்கப்படக் கூடிய விற்பனை நிலையங்களின் விற்பனையாளர்களை தீவிரமாகத் தேடுகிறார்கள். வளர்ந்து வரும் டிஜிட்டல் கொடுப்பனவு மோசடிகள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கும் பயனர்களைக் கூட விட்டு வைக்காது வியப்பில் ஆழ்த்து கின்றன. ஒருமுறை இதில் சிக்கிக் கொண்டால் அதிலிருந்து எப்படி வெளியேறுவது? நீங்கள் ஏமாற்றப்பட்டால், விரைவாகச் செயல்படவும், ஆபத்தைக் குறைக்கவும் ஏளைய வழங்கும் ஐந்து பயனுள்ள உதவிக் குறிப்புகள் இங்கே தரப்பட்டுள்ளன .

1. அங்கீகரிக்கப்பட்ட வாடிக்கையாளர் பராமரிப்பு சேவைகளை மட்டும் அழைக்கவும்:

2. உங்கள் வங்கி அல்லது கட்டண வழங்குநரின் வாடிக்கையாளர் பராமரிப்பு எண்ணை அழைப்பதில் நேரத்தை வீணடிக்காதீர்கள், அவர்களின் அதிகாரப்பூர்வ தகவல்கள் தொடர்பாக தொடர்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது. அதிகாரப்பூர்வமாக பட்டியலிடப்பட்ட தொடர்புகளை மட்டுமே நம்பி, உங்கள் கணக்கை முடக்கவும் அல்லது உங்கள் அட்டை/கட்டண முறையைத் தடுக்கவும். இது எந்த ஒரு மோசடி நடவடிக்கையையும் நிறுத்தவும் மற்றும் கட்டணம் மீளப்பெறுதல் அல்லது பணத்தை மீளப்பெறுதல் ஆகியவற்றைச் செயல்படுத்தவும் உதவும்.

3. தாமதமின்றி முறைப்பாடு செய்யவும் : உடனடியாக வங்கிக்குத் தகவல் தெரிவிக்கவும் மற்றும் 0112381045 அல்லது பொலிஸ் தலைமையகத்தில் (+94 1242111) பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குத் தெரிவிக்கவும். உங்கள் அருகில் உள்ள காவல் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்து அதன் நகலை கையில் வைத்துக் கொள்ளுங்கள்

4. ஒவ்வொரு விபரத்தையும் ஆவணப்படுத்துங்கள்!: ஒரு மோசடி தொடர்பான குழப்பங்களுக்கு மத்தியில், பீதியடைந்து, முக்கியமான விபரங்களைக் கவனிக்காமல் விட்டு விடாதீர்கள். இந்த மோசடி தொடர்பாக நீங்கள் சந்தேகிக்கும் தருணத்திலிருந்து விபரங்களை நினைவில் வைத்து எல்லாவற்றையும் ஆவணப்படுத்த முயற்சிக்கவும் உரையாடலைப் பதிவுசெய்து, ஸ்கிரீன்ஷாட்களை எடுக்கலாம், ஏதேனும் செய்திகளை நகலெடுக்கலாம். மோசடி தொடர்பாக முறைப்பாடு செய்யும்போதும் மற்றும் தீர்வினை மேற்கொள்ள முயலும்போதும் இந்த விபரங்கள் விலைமதிப்பற்றதாக இருக்கும்.

5. உங்கள் பாதுகாப்பை மேம்படுத்தவும்: கடவுச்சொற்களை வலுவான மற்றும் தனித்துவமானதாக மாற்றுவதன் மூலம் உங்கள் பாதுகாப்பை வலுப்படுத்தவும், இரு காரணி அங்கீகாரத்தை செயல் படுத்தவும் மற்றும் உங்கள் சாதனங்களை தொடர்ந்து ஸ்கேன் செய்யும் வலுவான தீம்பொருளை உள்ளிடவும் நீங்கள் அதை இயக்கியதும், இணையத்தள பரிவர்த்தனைகளுக்கு மத்திய வங்கி கட்டாயப்படுத்திய டோக்கன் முறைமை போன்ற வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் கட்டண தெரிவுகளை தேர்ந்தெடுக்கவும்

6. பகிர்வு மற்றும் விழிப்பூட்டல்: டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மோசடிக்கு பலியாவது ஒரு சோதனையாக இருக்கலாம். உங்கள் அனுபவத்தை நண்பர்கள், குடும்பத்தினர், பெரியவர்கள் மற்றும் சமூக ஊடகங்களில், அத்தியாவசிய பாதுகாப்பு உதவிக் குறிப்புகளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். மற்றும் நீங்கள் செய்த தவறினை எவ்வாறு சரி செய்தீர்கள் என்பதை முன்னெப்டியே பகிர்ந்து கொள்ளுங்கள்.

அதிகளவு விழிப்புணர்வோடு, நமது சாதனங்களைப் பாதுகாப்பதன் மூலமும், நமக்காக மட்டுமல்ல, நம்மைச் சுற்றியுள்ள மற்றவர்களுக் காகவும் தகவல்களை அறிந்து விழிப்புடன் இருப்பதன் மூலம் பாதுகாப்பான டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பை நாம் வளர்த்துக் கொள்ளலாம்.